செ.வெ.எண்:372 நாள்:08.06.2018

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாட்டை பிறப்பிடமாகக் கொண்ட மகளிருக்கு 2017-2018 ஆம் ஆண்டில் சுதந்திர தின விழா 15.08.2018 அன்று கொண்டாடுவதை முன்னிட்டு பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த சமூக சேவகர் மற்றும் பெண்கள் நலனில் சிறப்பாக செயல்படும் சேவை நிறுவனங்களுக்கு 2018 சுதந்திர தின விழா விருது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட உள்ளது.

எனவே இது குறித்து தகுதியுள்ள பெண்கள் திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகத்தை நேரிலோ அல்லது தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை 15.06.2018-க்குள் சமர்ப்பிக்குமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.